www.kalviexpress.in

**+1 வணிகவியல் ஆண்டு இறுதித் தேர்வு ஏப் -2023**

**சரியான விடை 20X1=20**

| A Type | B Type |
|---|---|
| 1. (ஈ) கூட்டுவாரிசுதாரர் | (ஈ) இடம் |
| 2. (இ) பங்குதாரர் | (ஈ) முந்தைய ஆண்டு |
| 3. (ஈ) மொத்த வியாபாரி | (இ) இலாபம் ஈட்டுதல் |
| 4. (அ) பாண்டியர் | (ஆ) வட்டி |
| 5. (ஈ) 1844 | (ஈ) மொத்த வியாபாரி |
| 6. (அ) வைப்பு இரசீது | (இ) பங்குதாரர் |
| 7. (அ) மறு ஏற்றுமதி | (ஈ) 1844 |
| 8. (இ) இலாபம் ஈட்டுதல் | (அ) வைப்பு இரசீது |
| 9. (இ) B 2 G - அலிபாபா | (ஈ) கூட்டுவாரிசுதாரர் |
| 10. (ஆ) வட்டி | (இ) ஒப்பந்தம் |
| 11. (அ) ஜெனிவா | (அ) நிதி பரிமாற்றம் |
| 12. (ஈ) 1935 | (அ) ஜெனிவா |
| 13. (இ) ஒப்பந்தம் | (அ) இரண்டு |
| 14. (ஈ) இடம் | (ஈ) 1935 |
| 15. (ஈ) முந்தைய ஆண்டு | (ஆ) செலுத்தல் சமநிலை |
| 16. (ஆ) தனியாள் வணிகம் | (அ) மறு ஏற்றுமதி |
| 17. (அ) 25 | (ஆ) தனியாள் வணிகம் |
| 18. (அ) நிதி பரிமாற்றம் | (அ) 25 |
| 19. (ஆ) செலுத்தல் சமநிலை | (அ) பாண்டியர் |
| 20. (அ) இரண்டு | (இ) B 2 G - அலிபாபா |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. நாளங்காடி:** பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடம் அங்காடி என அழைக்கப்பட்டது. அப்பொருள்களின் விற்பனை பகலில் நடந்ததை நாளங்காடி என அழைக்கப்பட்டது.

**22. தனியாள் வணிகர்:** தானே முதலிட்டு, தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி, எவர் ஒருவர் வியாபாரத்தை மேலாண்மை செய்து பயன் பெறுகிறாரோ, அவரே தனியாள் வணிகர் எனப்படுகிறார்.

**23. பண்டகக் காப்பகத்தின் பல்வேறு வகைகள் (4)**

1. **உரிமையியல் அடிப்படையில்:-** தனியார் பண்டக காப்பகங்கள், அரசு பண்டக காப்பகங்கள், பொதுப் பண்டக காப்பகங்கள், கூட்டுறவு பண்டக காப்பகங்கள், பிணையகாப்பு பண்டக காப்பகங்கள், நிறுவனமுறைப் பண்டக காப்பகங்கள், விநியோக மையப் பண்டக காப்பகங்கள்

2. **பண்டங்களின் அடிப்படையில்:-**பொதுப் பண்டக காப்பகங்கள், சிறப்பு பொருள் பண்டக காப்பகங்கள், குளிர்பதன பண்டக காப்பகங்கள் அல்லது குளிரூட்டப்பட்ட கிடங்குகள், தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டக காப்பகங்கள், தானியங்கி பண்டக காப்பகங்கள்.

**24. தொழில் செயல்முறை புறத் திறனீட்டல்** வெளி நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு வேலைகளை (அ) செயல்களைப் பெறுவதற்கு தொழில் செயல்முறை புறத் திறனீட்டல் என்று பெயர்.

**25. "பெருநிறுவன ஆளுகை** என்பது சம்பந்தப்பட்ட தொழில் அமைப்பில் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புத் தன்மை போன்றவற்றை மேம்படுத்தும் ஒரு செயல்" - **உலக வங்கி.**

"பெருநிறுவன ஆளுகை என்பது எந்த ஒரு நிறுமத்தையும் செம்மையாக இயக்கி, திறம்பட வழிநடத்தி, கட்டுப்படுத்த உதவும் ஒரு அமைப்பு முறை". - **கேட்பரி குழுமம்.**

**26. குறு நிறுவனங்களுக்குச் சில எ.கா: தருக.**

மண்பாண்டங்கள் செய்தல், பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்தல், போக்குவரத்து, பழுதுபார்க்கும் கடைகள், குடிசைத் தொழில்கள், சிறிய கைத் தொழில்கள், கைத்தறி மற்றும் கைவினை தொழில்கள்.

**27. இடைநிலையர்:** தொடக்கநிலை உற்பத்தியாளரிடமிருந்து, இறுதி நிலை நுகர்வோரிடம் சென்றடையும் வரையில், பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைவருமே இடைநிலையர் ஆவர்.

**28. உலக வர்த்தக அமைப்பு (WTO):** உலக வர்த்தக அமைப்பு 1995 ஜனவரி 1 அன்று நிறுவப்பட்டது. GATT சில மாற்றங்களுடன் உலக வர்த்தக அமைப்பு ஆக மாற்றப்பட்டது. 2016 ஜுலை 29 வரை 164 நாடுகள் இதில் உறுப்பினராக உள்ளன. உலக வர்த்தக அமைப்பு உருவாக்கிய மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

**29. வருமானவரி:** ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி வருமானவரி எனப்படும். இது ஒரு நேர்முக வரி ஆகும். இவ்வரியில் வரிச்சுமையினை மற்றொருவர் மீது மாற்ற இயலாது.

**30. S** என்பவர் தன்னுடைய மகிழ்வுந்தை **Rs**5,00,000-க்கு **T** என்பவருக்கு விற்பனை செய்ய ஒப்புக்கொள்கிறார். அதே போல **T** என்பவரும் மகிழ்வுந்தை வாங்க ஒப்புக்கொள்கிறார். இது ஒரு **செல்தகு ஒப்பந்தமாகும்.**

சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய ஓர் உடன்படிக்கையே சட்டப்படி **செல்தகுஒப்பந்தம் ஆகும்.**

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. மனித செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக**

மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மனிதச் செயல்பாடுகள் என்று பெயர்.

இவை இரண்டு வகைப்படும் அவை:-

பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்.

**பொருளாதாரச் செயல்பாடுகள்** இலாபம் ஈட்டும் தன்மை எகா:- வேலை, பழங்கள் விற்பது.

**பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்:-** உளவியல் தேவையைப் பூர்த்தி செய்வது எகா:- தொண்டு, சமுதாயப் பணிகள்.



www.kalviexpress.in

**32. இந்துக் கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றினை விவரி**

**இந்துச் சட்டத்தின் படி கட்டுப்படுத்துதல்:-**இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம், இந்து சட்டத்தின் படி கட்டுப்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்படுகிறது. இந்து சட்டத்தின் 2 பிரிவுகள் தயாபாகா, மிட்டக்சரா

**மேலாண்மை:-**இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது "கர்த்தா" அல்லது "மேலாளர்" ஆவார். அக்குடும்பத்தில் உள்ள அனைவரும் கர்த்தாவின் மேல் முழு நம்பிக்கை உள்ளவர்கள். கர்த்தாவே வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்ய உரிமை பெற்றவர்.

**பிறப்பால் உறுப்பினர்:-** இக்குடும்பத்தில் உறுப்பினராக அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்க வேண்டும். அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண் குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும். உறுப்பினராக எவ்வித சம்மதமோ அல்லது உடன்படிக்கையோ தேவையில்லை.

**33. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள்:** ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணை நிலை ஆளுநர்கள், நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் வகையில் நியமிக்கப்படுவார்கள்.
பல்வேறு துறைகளில் இருந்து பத்து இயக்குநர்கள்
இரண்டு அரசு அதிகாரிகள்
நான்கு இயக்குநர்கள் (வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர்)

**34. கப்பல் வாடகை ஒப்பாவணம்:** என்பது, கப்பல் உரிமையாளருக்கும் ஏற்றுமதியாளருக்கும் அல்லது அவரது முகவருக்கும் இடையே, முழு கப்பலையோ அல்லது கப்பலின் ஒரு பகுதியையோ, குறிப்பிட்ட கப்பல் பயணத்திற்கும் அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு சரக்கை ஏற்றிச் செல்ல செய்து கொள்ளும் ஓர் உடன்பாடு ஆகும்.

**35. சமூகப் பொறுப்புணர்வின் வகைகள்: (3)**
பொருளாதார பொறுப்புணர்வு, சட்டப் பொறுப்புணர்வு, தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு, தன் விருப்ப பொறுப்புணர்வு

**36. கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் ஆதாரங்களின் வகைகள்:**
குறுகிய கால நிதி, நடுத்தர கால நிதி, நீண்ட கால நிதி

**குறுகிய கால நிதி:-**கடன்களும் முன் பணங்களும், வங்கி மேல்வரைப்பற்று, மாற்றுச்சீட்டை வட்டம் செய்தல், வியாபாரக் கடன், அடகுக் கடன், பந்தக கடன், அடமானம் கடன், பிணையக் கடன், தூயக் கடன், வணிகத்தாள், வாடகை கொள்முதல் நிதி, கடன் வசூல் முகமை.

**நடுத்தர கால நிதி:-** வங்கிக்கடன், நிறுவனக் கடன், குத்தகை நிதி

**நீண்ட கால நிதி:-** பங்குகள் (நேர்மைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள்), கடன் பத்திரங்கள், இருத்திவைக்கப்பட்ட ஆதாயம், பொது வைப்பு, வணிக வங்கிகளில் இருந்து நீண்ட காலக் கடன் பெறுதல், நிதி நிறுவனக் கடன்கள்.

| **37.ஏற்றுமதிப் பொருட்கள்** | **இறக்குமதிப் பொருட்கள்** |
|---|---|
| பெட்ரோலியப் பொருட்கள் | எண்ணெய் முதலான சுரங்க எரிபொருள் |
| நகைகள் | வைரம் மற்றும் விலையுயர்ந்த உலோகங்கள் |
| ஆட்டோமொபைல்ஸ் | மின்சார இயந்திர சாதனங்கள் |
| பயோகெமிக்கல் | கணினி உள்ளிட்ட இயந்திரங்கள் |
| மருந்துப் பொருட்கள் | ஆர்கானிக் கெமிக்கல் |

**38. இருதரப்பு வாக்குறிதிகளின் வகைகள்:-** இருதரப்பு மற்றும் தன்னிச்சையான வாக்குறுதி, இருதரப்பு மற்றும் சார்ந்திருக்கின்ற வாக்குறுதிகள், இரு தரப்பு மற்றும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வாக்குறுதிகள்.

**39. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் (3)**
இந்தியாவில் சமமான வரி வீதத்தினை தோற்றுவிப்பதே சரக்கு மற்றும் சேவை வரியின் முதன்மை நோக்கம் ஆகும்.
வரியின் விழுத்தொடராக விளைவினை தவிர்க்க, சரக்கு மற்றும் சேவை வரி முன் செலுத்திய வரியினை சரிக்கட்டிக் கொள்ள அனுமதிக்கிறது.
ஏற்றுமதியினை ஊக்குவிக்க, வசூலிக்கப்பட்ட உள்ளீட்டு வரி திருப்பி வழங்கப்படுகிறது. எனவே ஏற்றுமதியின் மீது வரி இல்லை.
வரி அடிப்படையை அதிகரித்தே வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை மற்றும் வரி வருவாய் அதிகரிக்கப்படுகிறது.
வரி அறிக்கை வழிமுறைகளை எளிமையாக்க, பொதுவான படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. வணிக வரி அலுவலகங்களுக்கு செல்லும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.
இணையதள வரி செலுத்தல்கள் மற்றும் படிவங்களைச் சமர்ப்பிக்க சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு வலையமைப்பு என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

**40. i) செலுத்துகைக்கு பிறகு ஆவணங்கள் ஒப்படைத்தல்**
இம்முறையில் இறக்குமதியாளரின் வங்கிப் பணம் செலுத்திய பிறகே, இறக்குமதியாளரிடம் ஆவணங்கள் ஒப்படைக்கப்படும்

**ii) ஏற்புக்கு பிறகு ஆவணங்கள்** ஒப்படைத்தல்
இம்முறையில் இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர் வரைந்த மாற்றுச்சீட்டிற்கு ஒப்புதல் தெரிவித்த பிறகே ஆவணங்கள் ஒப்படைக்கப்படும். இறக்குமதியாளரின் வங்கி ஏற்றுமதியாளரின் வங்கியின் மூலம் மாற்றுச்சீட்டின் முதிர்வு நாளிலோ அல்லது அதற்கு முன்பதாகவோ பணத்தை செலுத்தும்.



www.kalviexpress.in

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

| 41.அ. உற்பத்தித் தொழில் | வணிகம் | வியாபாரம் |
|---|---|---|
| பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி, மாற்றுதல் பயனுள்ள பொருட்களை தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்றது. | பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலைக் குறிக்கின்றது. | பொருட்கள் மற்றும் சேவைகள், கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது. |
| கச்சா பொருட்கள், பகுதியாக முடிவு பெற்ற பொருட்களை முழு இறுதிப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது. | வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை உள்ளடக்கியது. | பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது. |
| அதிக முதலீடு தேவை | குறைந்தளவு முதலீடே தேவை | போதுமான சரக்கிருப்பை வைத்திருக்கவும், கடன் அளிக்கவும் தேவையான முதல் தேவை. |
| அதிக இடர்பாடு கொண்டது | குறைவான இடர்பாட்டைக் கொண்டது. | குறைவான இடர்பாட்டைக் கொண்டது. |
| பொருட்கள் மற்றும் சேவையின் வழங்கல் அளிப்பு பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | பொருட்கள் மற்றும் சேவையில், தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. |

**41.ஆ. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?**

**பெயர் குறித்த உட்பிரிவு:-** நிறுவனத்திற்கு சட்ட பூர்வமாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது. அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களும் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால், நிறுமத்தின் பெயருடன் "வரையறுக்கப்பட்டது" என்ற வார்த்தை சேர்க்க வேண்டும்.

**இடங்குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம், இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும். தொழில் தொடங்குவதற்கு முன்பே, நிறுமத்தின் பதிவு அலுவலகத்தைத் தெரிவிக்க வேண்டும்.

**நோக்கம் குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தால் செயல்படுத்தக் கூடிய நோக்கங்கள் அனைத்தையும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். நிறுமத்தின் துணை நோக்கங்கள் மூலம் முக்கிய நோக்கங்களை அடையத் தேவையான வழிமுறைகளும் விளக்கப்பட்டிருக்கும். இதில் குறிப்பிடப் பெறாத எச்செயலிலும் நிறுமம் ஈடுபடாது.

**பொறுப்புக் குறித்த உட்பிரிவு:-** பொறுப்புறுதி நிறுமமாயின், அது கலைப்பிற்குள்ளாக நேரிடும் போது, அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிசார் பொறுப்புகளை தீர்க்க இயலாத நிலையில் ஒவ்வொரு உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும்.

**முதல் குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் (ஒரு பங்கின் குறைந்த பட்ச மதிப்பு) ஆகியவற்றைப் பற்றி இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**அமைப்பு குறித்த உட்பிரிவு:-** பங்குதாரர்கள் தாங்கள் ஒருங்கிணைந்து நிறுமமாக செயல்பட விரும்பும், தங்களின் விருப்பத்தை இது வெளிப்படுத்துகிறது. பொது நிறுமம் எனில் ஏழு நபர்களும், தனி நிறுமம் எனில் இரண்டு நபர்களும், அமைப்பு முறையேட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து இட வேண்டும்.

**42.அ. பொதுக் கழகத்தின் நன்மைகள் (3)**

**தன்னாட்சியுரிமை:-** அரசின் கட்டுப்பாடு இல்லாமல், தன்னாட்சியாக இயங்குகிறது. வியாபார சூழ்நிலைகளுக்கு ஏற்பவும், அதன் நன்மைகளுக்காகவும், திறந்த மனதுடன் முடிவு எடுக்கின்றது.

**சட்ட அமைப்புகளின் கட்டுப்பாடு:-** பாராளுமன்றம் அல்லது சட்டசபை அமைப்புகளின் குழுக் கட்டுப்பாடு மூலம் கட்டுப்படுத்துகிறது. இதன் செயல்பாடுகள், அதன் நன்மைக்கு எதிராக இருந்தால், அதைச் சுட்டிக் காட்டவும் செய்கிறது.

**தயார் நிலை:-** சிறப்புச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுவதால், அதன் தேவைகளையும், நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்கின்றன.

**அரசின் தலையீடின்மை:-** அரசியல் தலையீடுகளால் பொதுக்கழகத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவது இல்லை. இதன் கொள்கைகளும் செயல்பாடுகளும் தொடர்ந்து நடைபெறும்.

**குறைந்த அளவிலான சுரண்டலுக்கே வாய்ப்பு:-** பொதுக்கழகத்தின் இயக்குநரவையில், சமுதாயத்தின் பலதரப்பட்ட பணியாளர்கள், நுகர்வோர்கள், சமுதாய நல விரும்பிகள் ஆகியோரை, அரசு தேர்ந்தெடுத்து இருப்பதால், சுரண்டல் மற்றும் ஊழல் ஆகியவை இருப்பது இல்லை.

**தீமைகள்:- (3)**

**தன்னாட்சி மற்றும் நெகிழ்வுத் தன்மை:-** தன்னாட்சி மற்றும் நெகிழ்வுத் தன்மை என்பது ஏட்டளவில் மட்டுமே உள்ளது. பொதுக்கழகங்கள் துறை அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மூலம் அதிகளவில் இடையூறு ஏற்படுகிறது.

**சர்வாதீன அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல்:-** பொதுக்கழகங்கள் அதன் செயல்பாடுகளில் சர்வாதீன அதிகாரம் பெற்றவை. ஒருவகையில் நுகர்வோரின்



www.kalviexpress.in

www.kalviexpress.in

தேவைகள் மற்றும் பிரச்சனைகளை தீர்க்க எவ்வித முயற்சியும் எடுப்பதில்லை.

**நெகிழ்வுத் தன்மையற்ற அரசியலைப்பு:-** பொதுக்கழகத்தினை உருவாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகள் நெகிழ்வுத் தன்மையற்றவை. எவ்விதத்திலும் மாற்றக் கூடியது அல்ல.

**குறைவான மேலாண்மைத் திறமை:-** பொதுகழகத்தின் அலுவலர்கள் பெரிய அளவில் மேலாண்மை அறிவு பெற்றவர்களோ திறமைசாலிகளாகவோ அதன் மேலாண்மை இயக்குநர்கள் இருப்பதில்லை.

**சிறப்புச் சட்டம் இயற்றுவதில் சிக்கல்:-** பொதுக்கழகங்களைச் சிறப்புச் சட்டங்கள் மூலம் மட்டுமே உருவாக்க முடியும். சிறப்புச்சட்டம் இயற்றுவது எளிதானது அல்ல. அதனை உருவாக்கும் சட்ட நடைமுறைகள் சிக்கலானவை.

**முரண்பாடு:-**பொதுக்கழகத்தின் இயக்குனரவை உறுப்பினர்களின் பல்வேறு குழுக்களிடையே பல்வேறு முரண்பாடுகள் உருவாகின்றன. இதனால் பொதுக் கழகங்களின் செயல்திறன் பெரிதும் பாதிக்கின்றன.

**42.ஆ. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள்**

**a. வணிக வங்கிகள்** i. பொதுத்துறை வங்கிகள் (எ.கா.) பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி

**ii. தனியார் துறை வங்கிகள்** (எ.கா.) ஐசிஐசிஐ, ஆக்சிஸ் வங்கி, சிட்டி யூனியன் பாங்க், எச்டிஎப்சி, கரூர் வைஸ்யா பாங்க், தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி.

**b. வட்டார ஊரக வங்கிகள்** (எ.கா.) பாண்டியன் கிராம வங்கி, பல்லவன் கிராம வங்கி, வள்ளலார் கிராம வங்கி

**c . கூட்டுறவு வங்கிகள்** (எ.கா.) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி (TNSC bank) , மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

**d. குறும நிதி நிறுவனங்கள்** (எ.கா.) முத்ரா வங்கி

**e. வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள்** (எ.கா) தேசியச் சிறுதொழில் கழகம் லிமிடெட் (NSIC) இந்தியச் சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI)

**43.அ. பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

**மத்திய வங்கி:-** ஒரு நாட்டின் பணம் மற்றும் வங்கிக் கட்டமைப்பின், உச்ச நிலையமாகவும், தேசியப் பொருளாதார நலனுக்காகவும், சிறந்த முறையில் செயல்படும் வங்கி, அந்த நாட்டின் மைய வங்கி எனப்படும். மைய வங்கிகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் இந்திய ரிசர்வ் வங்கி மைய வங்கியாகச் செயல்படுகிறது.

**வணிக வங்கிகள்:-** இவ்வகை வங்கிகள் பொது மக்களிடமிருந்து வைப்புளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகர்கள், தனி நபர்கள் ஆகியோருக்கும் விவசாயம், தொழிற்சாலைகள், போக்குவரத்து போன்ற துறைகளுக்கும் கடன்களை வழங்குகின்றன.**எகா:-** ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கரூர் வைஸ்யா வங்கி, ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி

**வளர்ச்சி வங்கிகள்:-**

தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குவது. அவைகளின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது வளர்ச்சி வங்கிகள் எனும் தனி வகை வங்கிகள் ஆகும். மேலும் அவை தொழில் துறை வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

**எகா:-** இந்தியத் தொழில் நிதித் கழகம்
இந்தியச் சிறு தொழில்கள் வளர்ச்சி வங்கி
முத்ரா வங்கி (குறுந்தொழில் வளர்ச்சிக்காக)

**வெளிநாட்டு வங்கிகள்:-** வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

**எகா:-**பாங்க் ஆ்.ப் அமெரிக்கா - அமெரிக்கா
பார்க்லேஸ் பாங்க் - இங்கிலாந்து
டியுட்செபாங்க் - மேற்கு ஜெர்மனி

**கூட்டுறவு வங்கிகள்:-** இந்தியாவில் உள்ள அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும் அதன் வாடிக்கையாளர்கள் அல்லது அதன் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் சிறிய வர்த்தகர்கள் போன்றவர்களுக்குச் சொந்தமானது. இந்தியக் கூட்டுறவு வங்கிகள் நகர்ப்புறங்களை அல்லது கிராமப்புறங்களை அடிப்படையாகக் கொண்டவை.

**எகா:-** தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு இந்தியா லிமிடெட்
தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி – தலைமை அலுவலகம் சென்னை
மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்
வத்தலக்குண்டு கூட்டுறவு நகர வங்கி லிமிடெட் திண்டுக்கல் மாவட்டம்.

**சிறப்பு வங்கிகள்:-** அரசாங்கத்தால் சிறப்பு நோக்கங்களுக்காகச் சில வங்கிகள் உருவாக்கப்படுகின்றன. இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கிச் சட்டம் 1981இன் படி இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கி உருவாக்கப்பட்டது. அதன் முக்கிய நோக்கம் இந்திய வணிகர்களின் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவது ஆகும்.

**எகா:-** இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கி
தேசிய வீட்டு வசதி வங்கி



www.kalviexpress.in

www.kalviexpress.in

**43.ஆ. வருமான வரியின் அடிப்படை கருத்துக்கள்**

**1. மதிப்பீட்டிற்குரியவர் : பிரிவு 2(7)** "சட்டத்தின் கீழ் யாரால் வருமான வரி அல்லது ஏதேனும் பிற பணத்தொகை செலுத்தப்படத்தக்கதாக உள்ளதோ அந்நபர் மதிப்பீட்டிற்குரியவராவார்"

**2. நபர் ( பிரிவு 2(31)**

1. தனிநபர் 2. இந்து கூட்டுக் குடும்பம் 3. கூட்டுப் பங்கு நிறுமம் 4. கூட்டாண்மை நிறுவனம் 5. பல நபர்களின் சங்கம் அல்லது தனிநபர்களின் குழுமம்.(கூட்டுறவு) 6. உள்ளாட்சி நிர்வாகம் 7. சட்ட ரீதியான செயற்கை நபர்கள்

**3. மதிப்பீட்டு ஆண்டு (பிரிவு 2(9) )** ஒரு வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானம் அடுத்த ஆண்டில் வரி விதிப்பிற்குட்படும். இதுவே மதிப்பீட்டு ஆண்டு எனப்படுகிறது. ஏப்ரல் 1ம் தேதி தொடங்கி அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதி முடியும் காலகட்டமே மதிப்பீட்டு ஆண்டு என்று அழைக்கப்படும்.

**4. முந்தைய ஆண்டு (பிரிவு 3)** வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு முந்தைய ஆண்டு எனப்படுகிறது. முந்தைய ஆண்டு என்பது எப்பொழுதும் ஏப்ரல் 1-ல் தொடங்கி மார்ச் 31-ல் முடியக்கூடிய வகையில் 12 மாதங்கள் கொண்டதாக இருக்கும். மேலும் இது நிதியாண்டு என்றும் அழைக்கப்படும்.

**5. வருமானம் (பிரிவு 2(24))**

வருமானம் வரிச்சட்டத்தின் பிரிவு 2(24) வருமானம் என்ற சொல்லுக்கு இலக்கணம் வழங்கியுள்ளது. அதன்படி, வருமானம் என்ற சொல்லில் பின்வருவன அடங்கியுள்ளன. 1. வியாபாரம் அல்லது தொழிலில் ஏற்பட்ட இலாபம் மற்றும் ஆதாயம் 2. பங்காதாயம்

**6.வேளாண் வருமானம்: பிரிவு 2 (IA)** விவசாயம் சார்ந்த வருமானத்தில் அடங்குவன: பின்வருமாறு

இந்தியாவில் அமைந்துள்ள மற்றும் விவசாயம் சார்ந்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட நிலத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வாடகை அல்லது வருவாய்

| 44அ. அடிப்படை | ஒப்பந்தம் | உடன்படிக்கை |
|---|---|---|
| **வரைவிலக்கணம்** | சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உடன்படிக்கையாகும். | உடன்பாடு என்பது, மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதி மொழியும், உறுதிமொழிகளின் ஒவ்வொரு தொகுதியும். |
| **செயலாக்கத் தன்மை** | அனைத்து ஒப்பந்தங்களும் செயல்படுத்த முடியும். | அனைத்து உறுதிமொழிகளும் செயல்படுத்த முடியாது. |
| **பரஸ்பர உறவு** | ஒப்பந்தம் என்பது, உடன்படிக்கையை உள்ளடக்கியது. | உடன்படிக்கையில், எல்லா ஒப்பந்தமும் உள்ளடக்கியது அல்ல. |
| **செல்லக்கூடியது** | சட்டத்திற்கு உட்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தமாகும். | சட்டத்திற்கு உட்பட்ட அல்லது உட்படாதவையும் உடன்படிக்கை ஆகும். |
| **சட்டபூர்வமான கடமை** | அனைத்து ஒப்பந்தங்களிலும் சட்டபூர்வமான கடமை உள்ளன. | சட்டபூர்வமான கடமையானது அனைத்து உடன்படிக்கையிலும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. |

**44.ஆ. தொழில் நெறிமுறைகள் அடிப்படை கூறுகள்:**

**உயர்நிலை மேலாண்மையின் ஆதரவு:-**

நன்னெறி விதிகளை ஏற்படுத்துவது ஒவ்வொரு தொழிலமைப்பின் அடிப்படைக் கடமையாகும். அப்படி நன்னெறி விதிமுறைகளை உருவாக்குவதில் உயர்மட்ட மேலாண்மையின் தார்மீக ஆதரவு இன்றியமையாதது. தார்மீக நன்னெறி விதிமுறைகளை உருவாக்க ஒவ்வொரு தொழிலமைப்பும் ஒரு குழுவை அமர்த்தி, அதில் அனைத்து ஊழியர்களின் பிரதிநிதிகளும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

**நன்னெறி நடத்ததை விதிகளை உருவாக்குதல் மற்றும் பரப்புதல்:-** தொழில் அமைப்புகள், நன்னெறி விதிகளை உருவாக்கி, அதை எழுத்து வடிவில் பணிபுரியும் அனைவருக்கும் புரியும்படி தெரிவிக்க வேண்டும். இந்த நன்னெறி விதிகள் தொழில் அமைப்பில் இயங்கும் ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியே உருவாக்கிட வேண்டும்.

**நன்னெறி விதிமுறைகளை கடைபிடிப்பதைக் கண்காணித்தல்:-** நன்னெறி விதிமுறைகளை, ஒவ்வொரு பிரிவும் அல்லது துறையும் முறையாக கடைப்பிடிக்கின்றனவா என ஆய்வு செய்ய கண்காணிப்பு அவசியம். இதனை நன்னெறி கண்காணிப்பு என்று அழைப்பர்.

**அனைத்து ஊழியர்களையும் ஈடுபடுத்துதல்:-** நன்னெறி விதிகளுக்கு, பணியாளர்கள் முழு ஆதரவைத் திரட்ட, நன்னெறி விதிகளை உருவாக்குவதற்கு முன்பாக அதைப்பற்றி சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் பல்வேறு மட்டங்களில் விவாதம் நடத்தி, அவர்களின் எண்ணப் போக்கை அறிந்து, அதற்கு ஏற்றப்படி பணியாளர்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு குழு மூலம் நன்னெறி விதிகளை உருவாக்கப்பட வேண்டும்.

**நன்னெறி பலனை அளித்தல்:-** நன்னெறி விதிகளினால் விளைந்திட்ட பலனை ஆய்வு செய்ய, நன்னெறி தணிக்கை அவசியம். ஆனால் சில வகை செயல்களை எண் ரீதியாக வெளிப்படுத்துவது கடினம். **எகா:-** ஊழியர்களின் ஆற்றல், ஒழுக்கம், பொருளின் தரம் கவனம் போன்றவைகள். இருப்பினும் அவைகளுக்கும் எண் வடிவம் அளித்து தொழிலமைப்பின் ஒவ்வொரு செயலையும், நன்னெறி விதிகள் என்ற தர அளவுகோல்களைக் கொண்டு அளத்தல் அவசியம்.

**45.அ. போக்குவரத்தின் பல்வேறு வகைகள்:**

**நிலப்போக்குவரத்து:-**

**பொதிவிலங்குகள்:-** மலை, காடு மற்றும் பாலைவனம் போன்ற பின்தங்கிய பகுதிகளிலும் சிறு சிறு சுமைகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும். குதிரை, கோவேறு கழுதை, கழுதை, ஒட்டகம், மற்றும் யானை போன்றவ விலங்குகளை பொதிவிலங்குகள் என்று அழைக்கப்படுகிறது.



www.kalviexpress.in

**மாட்டுவண்டிகள்:-** இந்தியாவில் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் செல்வதற்குக் கிராமப் பகுதிகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சாலைப் போக்குவரத்து மாட்டு வண்டிகளே ஆகும். இது அருகிலுள்ள சந்தைகள் மற்றும் ரயில் நிலையங்களுடன் கிராமங்களை இணைக்கிறது.

**சாலைப் போக்குவரத்து:-** சாலை போக்குவரத்து என்பது, குறுகிய மற்றும் நடுத்தர தூரத்திற்கு மிகவும் ஏற்றதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் உள்ளது. மேலும் மற்ற போக்குவரத்து வகைகளின் திறனை அதிகரிக்கவும் அதற்கு துணை புரியவும் உதவுகிறது.

**இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்:-** நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே, மக்கள் சாலைகள் அமைத்தும், சக்கரம் பூட்டிய வண்டிகளைப் பயன்படுத்தியும் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் சென்று போக்குவரத்தினை எளிமைப்படுத்தியுள்ளனர்.

**டிராம் வண்டிகள்:-** 19 ஆம் நூற்றாண்டில் பெரிய நகரங்களுக்கு பொருத்தமான ஒரு போக்குவரத்து முறையாக இது தோன்றியது. டிராம் வண்டிகள் முதலில் குதிரைகளாலும், பின்னர் நீராவி சக்தியாலும் இப்போது மின்சாரத்தினாலும் இயக்கப்படுகிறது.

**தொடர்வண்டி போக்குவரத்து:-** ஜேம்ஸ் வாட் அவர்களின் கண்டுபிடிப்பான நீராவி இயந்திரம், உலகெங்கிலும் உள்ள போக்குவரத்து முறையில் மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தியது. தொடர் வண்டிகள் போக்குவரத்து, உலகெங்கிலும் மிகவும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட போக்குவரத்தாக உள்ளது. நீண்ட தூரத்திற்கு மேல் கனரக சரக்குகளை சுமந்து செல்வதற்கு, தொடர் வண்டிகள் மலிவான மற்றும் விரைவான வழி வகைகளாக இருக்கின்றன.

**போக்குவரத்து சமீபத்திய வளர்ச்சிகள்:-**
1.மெட்ரோ ரயில் 2. மோனா இரயில் 3. புல்லட் இரயில் 4. குழாய் போக்குவரத்து 5. கன்வேயர் போக்குவரத்து 6. கயிறு வழி போக்குவரத்து 7. உயர் சுழற்சி வளையப் போக்குவரத்து
1.நீர்ப்போக்குவரத்து 3. விமானப் போக்குவரத்து ஆகும்.

**45.ஆ. பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகள்** 1. இது பன்னாட்டு அளவில் குறுகிய கால கடன் நிறுவனமாக செயல்படுகிறது.
2. இது பரிமாற்ற விகிதங்களின் சாதாரண சரிகட்டுதல்களை செய்வதற்கு உதவுகிறது
3. இது உறுப்பு நாடுகளின் நாணயங்களை தன்னகத்தே வைத்துள்ளது. அதிலிருந்து கடன் வாங்கக்கூடிய உறுப்பினர் நாடுகள் நாணய மதிப்பை பெற்றுக்கொள்ளலாம்.
4. நல்ல வலுவான பொருளாதார மற்றும் நிதிக்கொள்கையை பின்பற்றும் நாடுகளுக்கு பொருளாதார நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய வளர்ச்சிக்கு வழி வகுக்கிறது.
5. உறுப்பு நாடுகளின் பயனுள்ள கொள்கைகளை வலுப்படுத்தவும் செயல்படுத்தவும் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி அளிக்கிறது. வங்கியியல், நிதி, நாணய மற்றும் பரிமாற்றக் கொள்கைகளை வடிவமைப்பதில் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகிறது.
6. உறுப்பினர் நாடுகளின் வாணிக சமநிலையில் ஏற்படும் சமமற்ற தன்மையைச் சரி செய்யஉதவுகிறது.

| **46 அ. அடிப்படைகள்** | **உலகளாவிய வைப்பு இரசீது** | **அமெரிக்க வைப்பு இரசீது** |
|---|---|---|
| மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும் | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும். |
| யாருக்கு இது வெளியிடப்படும் | ஒன்று அல்லது அதற்கு மேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும். | அமெரிக்க குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும். |
| எங்கு பட்டியலிடப்படும் | அமெரிக்கா தவிர்த்த, இதர பங்கு மாற்றகங்கள் | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப்படும். |
| ஒப்புதல் | இதனை வெளியிட, அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவை இல்லை. | இதனை வெளியிட அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்கத்தின் ஒப்புதல் தேவை. |
| வெளியீட்டு வழிமுறை | இவை, பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும். | இவை, சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும். |
| மாற்றுகைத் தன்மை | உலகம் முழுவதும் மாற்ற கூடியது. | அமெரிக்காவில் மட்டும் மாற்றதக்கது. |

**46.ஆ.**






www.kalviexpress.in

**47.அ. வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகள்:**

வெவ்வேறு நாடுகளைச் சார்ந்த வாங்குபவர் மற்றும் விற்பவர்களிடையே நடைபெறும் வியாபாரம் பன்னாட்டு வியாபாரம் (வெளிநாட்டு வியாபாரம்) ஆகும்.

வெளிநாட்டு வியாபாரம் மூன்று வகைப்படும். அவை:- இறக்குமதி வியாபாரம், ஏற்றுமதி வியாபாரம், மறுஏற்றுமதி வியாபாரம்.

**இறக்குமதி வியாபாரம்:-** உள்நாட்டுத் தேவைக்காக வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே இறக்குமதி வியாபாரம் ஆகும்.

எகா:- இந்தியா வளைகுடா நாடுகளில் இருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்தலைக் கூறிக்கலாம்.

**ஏற்றுமதி வியாபாரம்:-** உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை, வெளிநாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

எகா:- இந்தியா இரும்பு எஃகு போன்றவற்றை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தலைக் கூறலாம்.

**மறு ஏற்றுமதி வியாபாரம்:-** ஒரு நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

| 47 ஆ. அடிப்படையில் | செலுத்தல் சமநிலை | வாணிப சமநிலை |
|---|---|---|
| **பொருள்** | குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டில் குடியிருப்போர்களுக்கும், மற்ற நாடுகளில் குடியிருப்போர் களுக்கும் இடையில் ஏற்படும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் முறைப்படியான பதிவுகளில் ஒரு அறிக்கையே ஆகும். | ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிக்கும். |
| **நடவடிக்கைகளின் தன்மை** | இது சரக்குகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் இரண்டையும் பதிவு செய்கிறது. | இதில் சரக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் மட்டும் பதிவு செய்யப்படும். |
| **மூலதன நடவடிக்கைகளில் பதிவு** | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்கிறது. | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்வதில்லை. |
| **நடவடிக்கை உள்ளமைப்பு** | இதில் வாணிபச் சமநிலை, சேவைகள் சமநிலை, ஒரு பக்கமான செலுத்தல் பரிமாற்றம் மற்றும் மூலதன நடவடிக்கைகள் அடங்கும். | செலுத்தல் சமநிலையின் நடப்புக் கணக்கில் ஒரு பகுதி ஆகும். |
| **நிகர விளைவு** | எப்பொழுதும் பெறுதல் மற்றும் செலுத்துதல் சமநிலையில் இருக்கும். | இது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அல்லது சமநிலையிலோ இருக்கும். |
| **பொருளாதார நிலையை காட்டுதல்** | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்ள உதவுகிறது. | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதில்லை. |

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

www.maduraicommerce.com



www.kalviexpress.in